விலை ரூபா 1·25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 9 முஹற 9 இதழ் 227

யாழ்ப்பாணம் புதன்கிழமை 25-9-1985

## "தீவிரவாதிகளே கொல்லப்பட்டனர்"

(கொழும்பு)

"பட்டிருப்பில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை. 'ரி. வி. யில் வீடியோ படம் பார்த்துக் கொண்டிருந்த தீவிரவாதிகளே கொல்லப்பட்டுள்ளனர்" என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று அவரது அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"சில தினங்களுக்கு முன்னர் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் 'ரி. வி யில் வீடியோ படம் பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர் இது பற்றி தங்களின் கருத்து என்ன" என்று 'ஈழநாடு' நிருபர் வினவிய போதே அமைச்சர் திரு அத்துலத் முதலி மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"அம்பாறையில் வீடியோ படம் பார்த்துக் கொண்டிருந்த தீவிரவாதிகளே கொல்லப்பட்டுள்ளனர். பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை" என்று அவர் கூறினார். (ரா-கி)

# தமிழ்நாடு நேற்று ஸ்தம்பித்தது

# 3 லட்சம் பேர் உண்ணாவிரதம்!

## திருச்சி மத்திய சிறையில் 1000 கைதிகள் உண்ணாவிரதம்

(சென்னை)

**இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தில் நேற்று நடைபெற்ற பன்னிரண்டு மணிநேர உண்ணாவிரதத்தில் மூன்று லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்,**

**நேற்றுக் காலை ஆறுமணி முதல் மாலை ஆறுமணிவரை நடைபெற்ற ஹர்த்தால் காரணமாக தமிழகமே ஸ்தம்பித்தது. பார்க்கும் இடமெல்லாம் வெறிச்சோடிக் காணப்பட்டது ரயில், பஸ், விமானச்சேவைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.**

திருச்சி மத்திய சிறைச்சாலையில் ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து சுமார் ஆயிரம் கைதிகள் நேற்று முழுநாள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தமை, குறிப்பிடக் கூடிய அம்சமாக இருந்தது

தமிழ் நாட்டிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

மாநில அரசு அலுவலகங்கள், கடைகள், சினிமா அரங்குகள், கல்வி நிறுவனங்கள், வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன டாக்ஸிகளோ, ஓட்டோ ரிக்ஷாக்களோ ஓடவில்லை. விமானச் சேவைகளும், ரயில் சேவைகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(5-ம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர்களுக்கு காண்பிக்கப்பட்ட படம்

(கொழும்பு)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடர்பான 'வீடியோ' படம் ஒன்று நேற்று பாதுகாப்பு அமைச்சில் பத்திரிகையாளர்களுக்குப் போட்டுக் காண்பிக்கப்பட்டது

இந்த 'வீடியோ' படம் சுமார் 15 நிமிடங்கள்வரை ஓடியது. இதில் தாக்குதலுக்குள்ளான

(5ம் பக்கம் பார்க்க)

## 20 பேர் இறந்ததாக 'ரூபவாஹினி' கூறுகிறது

(கொழும்பு)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதலில் இருபது தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும், பாதுகாப்புப் படைத்தரப்பில் பதினொரு பேர் எரிகாயங்களுக்குள்ளானார்கள் என்றும், பாதுகாப்புப் படையினரில் எவரும் பலியாகவில்லை என்றும் நேற்று இரவு 'ரூபவாஹினி' தனது செய்தியில் தெரிவித்தது.

## கிளிநொச்சி பொலிஸ்நிலைய தாக்குதல்: பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கம்

(இ பெஞ்சமின்)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடர்பான விபரங்களை தேசிய பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் முப்படைகளின் இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்காவும் வெளியிட்டனர்.

"நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலின்போது பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புக்கு இராணுவத்தினர் வரமுடியாது தடுப்பதற்காக வீதியில் கண்ணிவெடிகளைத் தீவிரவாதிகள் புதைத்து வைத்திருந்தனர் இதனையடுத்து இராணுவத்தினர் தமது முகாமில் தங்கியிருந்தனர்.

"சுமார் 5 முதல் 7 தொன் எடையுள்ள கனரக லொறி ஒன்று டீசல் பெற்ரோல், வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் முன்பாக வீதியில் நிட

(5ம் பக்கம் பார்க்க)

## இந்த வீதிகளில் போக்குவரத்து தடை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள பொலிஸ் இராணுவ முகாம்களுக்கு ஓரமாகவுள்ள பிரதான பாதைகள் பொதுமக்களின் போக்குவரத்துப்பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கிளிநொச்சிப் பொலிஸ்

8-ம் பக்கம் பார்க்க)

## 'இந்து'வை நம்பவேண்டாம்; என்னைக் கேளுங்கள்"

### ஜனாதிபதி கருத்து

(கொழும்பு)

"'இந்து' பத்திரிகையில் இலங்கையினப்பிரச்சினை சம்பந்தமாக வெளிவரும் செய்திகள் முழுப் பொய்யானவை உண்மைநிலை அறிய என்னைக் கேளுங்கள்" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜப்பான் - இலங்கை நட்புறவுச் சங்கத்தின் மூன்று மாடிக் கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்துப் பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு

(5ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி: ஜீப்வண்டி பலத்த சேதம்!

(அநுராதபுரம்)

வீதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியினுள் இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த ஜீப் வண்டி பலத்த சேதத்துக்குள்ளானது.

பதவியாப் பகுதியில் இக் கண்ணிவெடிச்சம்பவம் நேற்று இடம்பெற்றது

சஜபாகு அணியைச் சேர்ந்த இராணுவத்தினர் இந்த ஜீப் வண்டியில் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த மூவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது (மா)

## கொட்டும் மழையிலும் நடந்த ஊர்வலம் பெருந்திரளான மாணவர் பங்குகொண்டனர்

(கா. யோகநாதன்)

**யாழ். நகர வீதிகளில், ஆர்ப்பாட்டத்தில் அணியணியாகச் சென்ற மாணவர்கள் அரசாங்க செயலகத்தைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டு, கச்சேரிக் கொடிக் கம்பத்தில் கறுப்புக் கொடியேற்றி, சிறையில் வாடும் இளைஞர்கள் தொடர்பாக நான்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜரை உதவி அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதனிடம் நேற்று கையளித்தார்கள்.**

அதிகாலை முதல் அடை தாங்கி, நகரவீதிகளில் மழை கொட்டும் மழையையும், மழை பெய்த போதிலும் ஆடியில் நனைந்துகொண்டே ஆர்ப்பாட்டம் குளிரையும், துச்சமென மதித்து மாணவ மாணவிகள் பாட்டம் ஊர்வலம் நடத்தி மதித்து. சிறையில் வாடும் ...கள், உடனே விடுதலை... ளர்கள்.

(5ம் பக்கம் பார்க்க)

## மாணவர் கையளித்த மகஜர் விபரம்

(யாழ்ப்பாணம்)

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு 18 மாத காலம் முடிவுற்று இதுவரை விடுதலைசெய்யப்படாமல் இருக்கும் இளைஞர்களை விடுதலை செய்யவேண்டும் அல்லது விசாரணை செய்ய வேண்டும்".

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்திற்கு, யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு கே. இராமநாதன் ஊடாக நேற்று மாணவர்கள் கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

(5ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## தேவை

பாவு தயாரிப்பாளர்கள். கோர்வையாளர்கள், மின்தறி நெசவாளர்கள் (பெண்கள்) யாழ் மாநகர எல்லைக்குள்வசிப்பவரும், 2 வருட அனுபவமுள்ளவரும், ஒரே நேரத்தில் இரண்டு மின்தறி மெஷினை இயக்கக் கூடியவரும் விரும்பத்தக்கது. மேற்குறிப்பிட்ட அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும் குறைந்த அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் நேரிலும் வரலாம். விண்ணப்பிக்கவேண்டிய முகவரி; ராஜ்கோபால்ஸ், 47. பெரியகடை, யாழ்ப்பாணம். 850

---

இரு பிள்ளைகளின் உடை தயாரிப்பதில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் உடன் தேவை: விண்ணப்பிக்கவும்: விளம்பர இல 889, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 889

---

யாழ் காதி அபூபக்கர் வீதியில் அமைந்துள்ள எமது வெல்டிங்கடைக்கு நல்ல வேலையாட்கள் தேவை; அல்லது வேலை பழகக்கூடியவர்கள் தேவை. நேரில் வரவும். குணோபல் வெல்டிங் சென்டர், காதி அபூபக்கர்வீதி. சோனகதெரு, யாழ்ப்பாணம். 288

---

தெல்லிப்பழையில் அமைந்திருக்கும் தொழிற்சாலைக்கு பிளாஸ்டிக் தொழிலில் மிகவும் அனுபவம் வாய்ந்த இயந்திரவியலாளரின் சேவை தேவைப்படுகிறது: 5 வருட அனுபவம் விரும்பத்தக்கது: தகைமைச்சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 901 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், 901

---

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் நான்கு அல்லது ஐந்து அறைகளுக்கு மேல் இருக்கக்கூடிய நல்ல சூழலில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய (தொலைபேசிஇருத்தல் நல்லது) வீடு ஒன்று உடன் வாடகைக்கு தேவை. யாழ் நகருக்கு மிக அண்மையில் இருப்பதுநன்று. தொடர்புகளுக்கு! மக்மிலன் புத்தகசாலை, இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 871

## விற்பனைக்கு

அல்சேசன் நாய் (1 வயது ஆண்) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 890

---

யாழ் குருநகர் (பீச்றோட்) இல் வீடு உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: விளம்பர இல. 886, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 886

---

சிங்கர் கால் மெஷின் 15 சி ரூ 2800/-, வயலின் இறியது ரூ. 1250/-, காலை 11—1மணி வரை ஸ்ரீ முருகன்ஸ் (எவர் சில்வர்), 140, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம், 884

## வகுப்புகள்

Spoken English by Mr. S. B. ஐயர் அவர்கள் ஆரம்பம்: 28 09-85 சனி. காலை 7-00 — 9 00. நாகலிங்கம் இன்ஸ்ரியூட், திருநெல்வேலி சந்தியிலிருந்து கல்வியங்காடு செல்லும் தெருவில் 200 யார் வந்து வலது பக்கம் திரும்பவும். (நாவலடிலேன்). 896

## கல்வி

Radio and Electronic Engineering- சனி, ஞாயிறு காலை வகுப்புக்கள். ஆண், பெண் ஆகிய இரு சாராரும் பயிலலாம். முன்கூட்டியே விபரங்களைப் பெறவும். ஆரம்பம் 28-09-85. தொடர்புகள்; பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம்; 876

---

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

---

## 1-வது பிறந்ததின வாழ்த்து
### செல்வன் விமலநாதன் ரஜீதரன்



புன்னாலைக்கட்டுவன் தெற்கு பிரபல மோட்டார் உதிரிப்பாக வர்த்தகர் விமலநாதன் ஜோதீஸ்வரி (சாந்தி) தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரஜீதரன் தனது முதலாவது பிறந்ததினத்தை 25-9-85 புதன்கிழமை (இன்று) தனது பெற்றோருடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா. அம்மா, அக்கா ரஜீதா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா: அப்பப்பா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரிய அன்ரிமார். மச்சான்மார், மச்சாள்மார். ஜேர்மனி பிரபு சித்தப்பா. உற்றார். உறவினர் பலர்களும் பெற்று சீர் சிறப்புடன் துர்க்காதேவியின் அருளாசியுடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

அ. விமலநாதன்.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு. சுன்னாகம். (849)

---

கண்காணிப்பு:

### ஈ. தே. வி. மு. பட்டியல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிக்க சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த 21 பேர்கொண்ட குழுவின் பெயர்ப் பட்டியலை ஈழ தேசிய விடுதலை முன்னணி தயாரித்து இந்திய அரசுமூலம் இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ரா மா)

---

### பகிரங்க ஏலவிற்பனை

எமது அலுவலகத்தில் 07-10-85 காலை 10-30 க்கு இலவச ஆயுர்வேத வைத்தியசாலை வெற்றுப் போத்தல்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். சித்திரவேலைக்காரர்கள் உடனடியாகப் பணம் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும். மேலதிக விபரம் எமது அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

அ. இராமனுதன்,
அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்.

யாழ் அபிவிருத்திச்சபை உபஅலுவலகம்,
ஏழாலை, 18-09-1985.
897

---

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்
### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

சாவகச்சேரி வடக்கு கிராம்புவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து கார்த்திகேசு தர்மலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்,

மரணமெய்தியவர்
நாகமுத்து கார்த்திகேசு நடராசா, கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

மனுதார்

வழக்கு இல: 232/ரி

எதிராக

1. நாகமுத்து கார்த்திகேசு, சுப்பிரமணியம்.
2. நாகமுத்து கார்த்திகேசு கிருஷ்ணசாமி, இருவரும் கிராம்புவில், சாவகச்சேரி.

—எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்காக காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி.
ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

தயாரித்தவர்கள்:
பரராஜசிங்கமும்,
அம்பிகைபாலனும்,
மனுதாரின் சட்டத்தரணிகள்.

768

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

வேலை வாய்ப்பு தேடி
வெளிநாடு செல்லவேண்டுமா?

VACANCIES FOR
Drivers (Long Vehicle), General Helpers, Welders, Masons, Tank Chippers and Joiners
in
BAHREIN

CONTACT:
K. SRIKANDAKUMAR,
75 (109), ARASADY ROAD, JAFFNA.
(899)

---

### யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் சங்கத்தின்
### உருக்கமான
## வேண்டுகோள்

18-9-85 இரவு 7-45 மணியளவில் ஆயுதங்களுடன் வாகனத்தில் வந்தவர்களினால் வீடியோ பிரசாத் நிலையத்தில் கடமையாற்றும் **சேனாதிராசா இராமனாதன்** அவர்களை கொட்டடியில் உள்ள அவரது சகோதரியாரின் இல்லத்தில் இருந்து கடத்திச் சென்றுள்ளார்கள். இதுவரை இவரைப் பற்றிய தகவல்கள் எதனையும் அறியாது அவரது மனைவி, குழந்தைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் ஊண், உறக்கமின்றி இருந்து வருகின்றனர். எனவே இவரை கடத்திச் சென்றவர்கள் தயவு செய்து உடனடியாக விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சி. நமசிவாயம்,
செயலாளர்,
**யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் சங்கம்.**

வர்த்தகர்கள் சங்கம்,
யாழ்ப்பாணம்.
22-09-85. (868)

---

## 31-வது நாள் நினைவஞ்சலி



### திருமதி மார்க்கண்டு சுந்தரம்மா

தோற்றம்: 10-05-1911 மறைவு: 26-08-1985

எங்கள் அன்னையின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மார்க்கண்டு அன் சன்ஸ்,
பாலாவோடை, காரைநகர்.
25-9-85; (900)

● அண்ணா சதுக்கத்தில் எம். ஜி. ஆர். — ● காந்தி சிலையடியில் மரகதம் சந்திரசேகர்

# தமிழகம் தழுவிய பூரண ஹர்த்தால்!

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்து நேற்றுக்காலைமுதல் தமிழகத்தில் 12 மணி நேர ஹர்த்தால் (பந்த்) ஆரம்பமானது. தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மெரீனா கடற்கரையில் உள்ள அண்ணா சதுக்கத்தில் சுமார் 1500 அ. தி. மு. க. ஆதரவாளர்களுடன் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இந்திய சமூகநலத்துறை இணை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் மெரீனா கடற்கரையில் காந்தி சிலையருகே இந்திரா காங்கிரஸ் சார்பில் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

தமிழக மாநில அரசின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றாக இந்த உண்ணாவிரதம், ஹர்த்தால் என்பன விளங்குகின்றன.

நேற்றுக்காலை ஆறுமணிமுதல் மாலை ஆறுமணிவரை சென்னை நகரம் மற்றும் தமிழகத்தின் ஏனைய நகர வீதிகளில் வாகனங்கள் எதுவும் ஓடக்கூடாதென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து மோட்டார் வாகனங்கள் எதுவும் ஓடவில்லை. இத்துடன் தமிழகத்திலிருந்து புறப்படும் மற்றும் தமிழகத்துக்கு வரும் ரயில் வண்டிகளும் நேற்று இயங்கவில்லை. விமான சேவையும் ஸ்தம்பிதமடைந்தது.

மருத்துவம், மின்சாரம், குடிதண்ணீர், பொலிஸ் துறை ஆகிய அத்தியாவசிய சேவைகள் இயங்குவதற்கு மட்டுமே நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றமும் நேற்று இயங்கவில்லை. வழக்கு விசாரணைகள் ஒத்திப்போடப்பட்டன. நீதிபதிகள் வழக்கறிஞர்கள் ஆகியோர் நீதிமன்றம் வரவில்லை. உயர் நீதிமன்றத்துக்கு நேற்று விடுமுறை என்று அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 6 மணிக்கு ஆரம்பித்த தமிழக ஹர்த்தால் மாலை ஆறு மணியுடன் முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் சகல சேவைகளும் வழமைக்குத் திரும்பும் என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை சென்னை நகரைச் சுற்றிப் பார்வையிட்ட பத்திரிகையாளர்கள் நகரமெங்கிலும் பூரண அமைதி நிலவியதாகவும் வழமையாக ஜன சந்தடியுடன் விளங்கும் பல வீதிகள், சாலைகள் கூட பூரணமாக வெறிச்சோடிக்கிடந்தன என்று தெரிவித்தனர்.

## வீரமணி கோஷ்டி விடுதலை!

(சென்னை)

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஹிந்தி ஒழிப்புப் போராட்டத்தில் குதித்த திராவிடக் கழகத்தலைவர் திரு. கி. வீரமணி சென்னை மத்திய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இவருடன் இவரது கட்சியைச் சேர்ந்த சுமார் 200 பேர் நேற்றுவிடுதலை செய்யப்பட்டனர். தமிழகத்தில் மத்தியஅரசு மறைமுகமாக ஹிந்தி மொழி திணிப்பில் ஈடுபடுகிறது என்று இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். (இ)

தமிழக அரசின் இந்த ஹர்த்தாலுக்கு பல்வேறு இந்திய இந்திய மாநில அரசுகளும் தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளன. (இ)

உலகச் செய்திகள்

'வாட்டர்கேட்' பாணியில 'கிறீன்பீஸ்' நெருக்கடி:

## பிரெஞ்சு அதிபர் மித்தரோன் பதவி விலகலாம்?

பாரிஸ், செப் 24

'வாட்டர்கேட்' ஊழலினால் அமெரிக்க அதிபர் றிச்சார்ட் நிக்ஸன் பதவி இழந்ததுபோல 'கிறீன் பீஸ்' நெருக்கடியினால் பிரெஞ்சு அதிபர் மித்தரோன் பதவி விலகலாம் என்று மேற்கத்திய அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். நியூஸிலாந்து 'கிறீன் பீஸ்' சமாதான இயக்கத்தின் 'றெயின்போ வேரியர்' கப்பலை பிரெஞ்சு புலனாய்வு ஸ்தாப

(7ம் பக்கம் பார்க்க)

# பாண்டிச்சேரியில் ஊர்வலம்!

(புதுச்சேரி)

பாண்டிச்சேரியிலும் நேற்று தமிழக அரசின் ஹர்த்தாலுக்குப் பூரண ஆதரவு தெரிவிக்கப்பட்டது. நேற்றைய தினத்தை பாண்டிச்சேரி அரசு விடுமுறைத் தினமாக அறிவித்திருந்தது.

பாண்டிச்சேரி முதலமைச்சர் எம். ஓ. எச். பாரூக் தலைமையில் நேற்று ஊர்வலமொன்றும் நடத்தப்பட்டது. இலங்கைத் தமிழருக்கு அனுதாபம் தெரிவித்தும், தமிழக அரசுக்கு இது தொடர்பாக ஆதரவு தெரிவித்தும் இந்த ஊர்வலத்தில் பதாகைகள் தாங்கிச் செல்லப்பட்டன.

யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி முழுவதிலும் நேற்று பூரண அமைதி பேணப்பட்டது. சகல கடைகள், திரையரங்குகள், பாடசாலைகள், தொழிலகங்கள், அரசாங்க-தனியார் நிறுவனங்கள் ஆகியன பூட்டப்பட்டிருந்தன. (இ)

★ பஞ்சாப் தேர்தல்கள்———————

# அபிப்பிராய வாக்கெடுப்பில் இ. காங்கிரஸ் முன்னணி!

புதுடில்லி, செப். 24

பஞ்சாப் மாநில சட்டசபை, பாராளுமன்றத் தேர்தல்கள் குறித்த அபிப்பிராய வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டது. இதில் பிரதமர் ராஜீவின் இந்திரா காங்கிரஸ் கட்சியே முன்னணியில் இருப்பது தெரியவந்துள்ளது.

பஞ்சாப் தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் நேற்றுடன் முடிவடைந்தன. இம்மாநிலத்தில் அனைத்து நகரங்களிலும் தேர்தல் பெரும் சூடு பிடித்துள்ளதைக் காண முடிந்தது.

இதேவேளை சீக்கிய தீவிரவாதிகள் இத்தேர்தலைக் குழப்புவதில் தீவிரமாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை வேட்பாளர்கள் சிலரின் மோட்டார் கார்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களின் வாகனங்களுக்கும் குண்டு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இக்குண்டுகளில் சில நேற்று வெடித்ததில் மூன்று சிறுவர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் இக்குண்டு வைப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்த நபரொருவரை பொதுமக்களும், பொலிசாரும் துரத்திப்பிடித்தனர்.

தேர்தலில் பொதுமக்களை அச்சமின்றி வாக்களிக்கும்படி தலைமை தேர்தல் அதிகாரி கேட்டுள்ளார். வாக்காளர்களுக்குப் போதியளவு பாதுகாப்பளிக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார். சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பஞ்சாப் தேர்தல்கள் 25-ம் திகதி இன்று) நடைபெறும். வாக்குகள் எண்ணுவது 26-ம் திகதி (மறுநாள் ஆரம்பமாகும். அன்றைய தினம் மாலை முடிவுகள் அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டது. (இ)

சட்டவிரோத மின்பாவனை:

## விவசாயி பலி!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் மின் இணைப்பு பெற முயன்ற 3பிள்ளைகளின் தந்தையான இளம் விவசாயி ஒருவர் அந்த மின்சாரத்துக்கே பலியானார்.

இச்சம்பவம் அண்மையில் சங்கானை தொட்டிலடிப்பகுதியில் நடைபெற்றுள்ளது. சட்டவிரோத மின் இணைப்பால் இதுவரை பல உயிர்கள் மின்சாரத்தினால் இரையானது தெரிந்ததே. (ச)

இலங்கைப் பிரச்னை:

## இரு அமெரிக்க செனட்டர்கள் அக்கறை!

புதுடில்லி, செப் 24

இலங்கையில் போர்நிறுத்தம், மற்றும் சமரசப் பேச்சுக்கள் குறித்து இரு அமெரிக்க செனட்டர்கள் மிகுந்த அக்கறை தெரிவித்துள்ளனர்!

ஜோன் கெரி, எட்வேட் மார்கே ஆகியோரே இந்த செனட்டர்களாவர். திரு ஜோன்கெரி, இலங்கையில் போர்நிறுத்தத்தைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்கம் போன்ற ஒரு சர்வதேச அமைப்பு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தியப் பிரதமரின் சமரச முயற்சிகளையும் பாராட்டியுள்ளார்.

செனட்டர் எட்வேர்ட் மார்கே இலங்கையில் சிங்கள-தமிழ்மக்களிடையே சமாதானம் நிலவச்செய்வதற்கான முயற்சிகளில் இலங்கை அரசு தீவிரமாக உழைக்கவேண்டுமெனக் கேட்டுள்ளார். இந்த இரு செனட்டர்களும் தமது கருத்துக்களை கடிதங்கள் மூலமாக ஜனாதிபதி ஜே ஆருக்கும், ராஜீவ் காந்திக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இத்தகவலை அமெரிக்காவிலுள்ள தமிழ் ஈழ ஆதரவு அமைப்பைச் சேர்ந்த திரு. ஸ்டீவ் திகலையம்பலம் நேற்று புதுடில்லியில் தெரிவித்தார். (இ)

## 'நர்ஸரி செல்லும் முதலாவது அரச குழந்தை!

லண்டன், செப். 24

பிரிட்டனின் முடிக்குரிய இளவரசரான சார்ள்ஸின் மூத்த புதல்வன் வில்லியம் 'நர்ஸரி' பாலர் பாடசாலை செல்ல ஆரம்பித்துள்ளார்.

மூன்று வயதான இளவரசர் வில்லியம் பிரித்தானிய அரச குடும்ப வரலாற்றில் முதன்முறையாக சாதாரண 'நர்ஸரி' பாடசாலைக்குச் செல்லும் முதலாவது அரச குழந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய அரச குடும்பத்தினர் பொதுப்பாடசாலைகள், கல்விநிலையங்களில் கல்விகற்பது கிடையாது. இவர்கள் பிரத்தியேகமாகவே தமக்கென ஆசிரியர்களை நியமித்துக்கொள்வது வழக்கமாகும்.

இளவரசர் சார்ள்ஸ் ஏனைய குழந்தைகளைப் போலவே தமது குழந்தையையும் பொதுப்பாடசாலைகளில் கல்விகற்கவிடப் போவதாகவும் அரச சௌகரியங்களைத் தவிர்த்து சாதாரணமாகவே தமது பிள்ளைகள் வளர்க்கப்படுவார்கள் என்று ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இளவரசர் வில்லியத்தின் தாயாரான முடிக்குரிய இளவரசி டயானா, சார்ள்ஸைத் திருமணஞ் செய்ய முன்னர் ஒரு 'நர்ஸரி' பாலர் பாடசாலை ஆசிரியராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

மணி வாக்கு

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

— ஔவையார்

# நமது நோக்கு

## இலங்கை அரசின் இலட்சியம்

உலக வரலாறு, தேச வரலாறு, சமூக வரலாறு எதுவென்றாலும் அது புனிதமான, காய்தல் உவத்தல் நீங்கிய வெளியீடாகக் காண்பது அரிதினும் அரிது.

உலக வரலாறு என்றால் அது ஐரோப்பாவின் வரலாறாக இருந்தது ஒரு காலம். உலகின் பத்திலொரு பங்கு மக்களுக்கு நூலின் பத்தில் ஒன்பது பகுதி கொடுக்கப் படுகிறது என்ற கண்டனம் எழுப்பப்பட்டது.

அதேபோல் ஆசியாவென்றால் இந்தியாவே நாமறிந்திருந்த சரித்திரம்.

காலமாற்றத்தில் இன்று இலங்கை போன்ற சிறுநாடுகள் பெருமிடம் பெற்றிருப்பதை நாம் அறியமுடிகிறது.

சென்ற வாரம் முடிவடைந்த கிரிக்கட் டெஸ்ற் போட்டியில் இலங்கை இந்தியாவைத் தோற்கடித்த பெருமை ஒரு சர்வதேச நிகழ்ச்சி என்பதற்கு சான்றாகும்.

இத்தகைய பெருமை இன்றுதான் உண்டென்று நினைப்பது சரிபோல் தெரியவில்லை. இலங்கை வரலாறு பலதரப்பட்ட தவறுகளுக்கு உள்ளான போதும் பண்டைக் காலத்தில் நாடு சிறந்திருந்ததற்கு பல சான்றுகள் இன்றும் உள.

துட்டகெமுனு காலத்தை மட்டும் நாம் நினைவுகொள்வது இன்றைய நிலைமைக்குப் பொருத்தமாகாது.

சிங்கள அரசு, தமிழ் அரசு என்றெல்லாம் பேசிப்பிணக்குற்று பிரிவினை என்னும் பிசாசு நாட்டைச் சின்னா பின்னமாகக் கிழித்தெறியும் இவ்வேளையில் 'இலங்கை அரசின் இலட்சியம்' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட செய்தி இன்று நிலவும் ஆணவ வேலீட்டைக் குறிக்கின்றது.

''முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைவரையான நாற்பது மைல் தூர வடகிழக்குப் பிரதேசத்தில் தமிழர்களை வெளியேற்றி அதன் மூலம் தடைசெய்யப்பட்ட வலயமொன்றை உருவாக்க வேண்டும் என்ற தமது இலட்சியத்தை இலங்கை அரசு நிறைவேற்றிக்கொண்டுள்ளது'' என்பது செய்தி.

செய்தியை வெளியிட்டவர் திருகோணமலை முன்னாள் எம். பி. திரு. சம்பந்தன் அவர்கள்! செய்தியை வெளியிட்ட இடம் தமிழகத் தலைநகர் சென்னை.

திருமலை சம்பந்தனுக்கு மட்டுமல்ல இலங்கைவாழ் தமிழ்மக்கள் அனைவருக்கும் உண்டான கவலைகள் மலைச்சுமையே! இதனை எவ்வாறு தலைச் சுமையாக்கலாமென்பதில் வெற்றிகண்டிருக்கிறது.

இலங்கை ஆட்சிக்கு இலட்சியம் உண்டா, அப்படியானால் அது என்னவென்பதை நாம் எவ்வாறு தெளிவு படுத்தலாம்?

சுதந்திர வர்த்தக வலயத்துடன் ஆரம்பமான ஐ. தே. ஆட்சி இன்று எட்டு வருடமுடிவில் 'தடை செய்யப்பட்டவலயம்' என்றொரு திட்டத்தை நிறைவேற்றி விட்டதா? எனவே அட்டமத்துச்சனியன் நீங்கி விட்டதென்று கொள்ள வேண்டும்.

அப்படியானால் தடை செய்யப்பட்ட வலயம் நல்ல காலம் பிறப்பதை அன்றே குறிக்கவேண்டும்.

இவையனைத்தும் நாம் பொறுப்புடன் வெளிப்படுத்தும் கருத்துக்கள் அல்ல.

நாம் எம்மைக் குறைத்து மதிப்பிடல் விவேகமான செயல் அல்ல. எவற்றை இழந்தபோதும் நெஞ்சிலே நம்பிக்கை இருக்க வேண்டும். அச்சம் துளியுமில்லாத மனமும், நேரே நிமிர்ந்த தலையும், தெளிந்த ஞானமுமே துன்புற்றிருக்கும் மக்களுக்கு வழிகாட்ட முடியும்.

ஐந்துகோடி மக்கள் தங்கள் தமிழ்ச் சகோதரர்களின் பாதுகாப்பான நல்வாழ்வு குறித்து நோன்பிருந்தாரென்றால் பட்ட மரமும் நம்பிக்கை கொண்டு தளிர்க்கும்.

இன்றைய ஆட்சியின் போக்கு விசனத்துக்கிடமானதென்பதில் ஐயமில்லை. பாகிஸ்தானிடமிருந்து அரிசியையும், ஆயுதத்தையும் இறக்குமதி செய்வது உண்மையானால், இந்தியாவின் மத்தியஸ்தத்தை மதித்து ஒரு நிரந்தரசமாதானத்தை தமிழ் மக்களுடன் ஏற்படுத்துவது சாத்தியமா?

தர்க்க ரீதியில் அதில் முரண்பாடு இல்லையெனலாம்; அறநெறிக்கு அந்நியமான அரசியல் கற்பு மாறுபடுகின்றது.

புராணக் கதையாகவிருக்கலாம். ஆனால் புத்தி புகட்டும் வரலாறு இலங்கை அரசைப் பற்றி நிறைய நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஈசனை இன்னிசையால் மகிழ்வித்த இராவணன், அருந்தவம் செய்த சீதையின் மேனியை நினைத்த குற்றமே இலங்கைக்கு கேடாக விளைந்தது என்கிறது இராமாயணம்.

எவராலும் ஊறு செய்ய முடியாதஇலங்கைமாநகரை ஒரு குரங்கு எரித்து விட்டதே என்று கவலையுற்றான் இராவணன். ஆனால் அவனுடைய ஆலோசகர் சபையில் இருந்த பேரறிஞர் ஒருவர் குரங்கின்வலிமையால்அல்ல சீதையின்கற்பு வலிமையால் இலங்கை அழிந்தது என்றார்.

கற்பு வாய்ந்த மங்கையர் வாழ்ந்திருந்தால் உலகம் வாழும்; சிறினால் உலகம் அழியும் என்பது என்றும் அழியாத உண்மை.

இன்று இந்த நாட்டில் தினமும் கொல்லப்படும் அப்பாவி தமிழ் மக்கள் பற்றியும், எஞ்சியிருக்கும் மக்கள் பாதுகாப்பு பற்றியும் பேரச்சத்தால் பீடித்திருப்பது மெய்; என்றுதான் எங்களைக் காப்பாற்ற அன்று வந்த அனுமான் படைபோல ஒன்று வாராதா என்று வடக்கே பார்த்தபடி மக்கள் மலைக்கின்றனர்.

இக்காலத்தில் அனுமான் படையை நினைத்து தவமிருத்தல் தவறு.

நானிலம் இலங்கை வரவிருக்கும் பாரத தேசத்தலைவரின் இராம ராச்சியத்தை விளக்கிவைத்த மகாத்மாவின் இன்றைய பிரதி ராஜீவ் காந்தியின் விசேட தூதுவர் ரொமேஷ் பண்டாரி தமிழ்இன அழிவைத் தடுத்து நிறுத்தும்படி இலங்கை அரசுக்கு வற்புறுத்த வேண்டும்.

தர்மம் தமிழர் பக்கமென்றால் விஜயம் வெற்றி பெறும்.

# சிங்களக் குற்றபத்திரத்தை தமிழ் இளைஞர் ஏற்க மறுப்பு

## நீதிபதி வற்புறுத்தியும் நடக்கவில்லை

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாகபயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து இளைஞர்கள் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அவர்களுக்கு குற்றப்பத்திரம் வழங்கப் பட்டபோது தமிழில் அந்த குற்றப்பத்திரம் வழங்கப்படாமையினால் ஒரு இளைஞர் அதனைப் பெறமறுத்துவிட்டார்.

நீதிபதி எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இளைஞர்களின் விபரம் வருமாறு:-

உடுப்பிட்டி கம்பர்மலையைச் சேர்ந்த வைத்திலிங்கம் ரவீந்திரராஜா அல்லது நவம் (வயது 25) என்ற இளைஞர்மீது இனத்துரோக நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றப் சாட்டப்பட்டு குற்றப்பத்திரம் வழங்கியபின்னர் இவரிடம் சட்டத்தரணி திரு. எப். எக்ஸ் விபரை அரச செலவில் ஏற்படுத்தித் தந்தால் ஏற்றுக் கொள்வீரா? என நீதிமன்றம் வினவியபோது பின்வருமாறு கூறினர்.

409 நாட்களுக்கு மேல் நான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறேன். எனதுபெற்றோரிடம் எதுவித தொடர்பும் ஏற்படுத்தித் தரவில்லை எனவே முதலில் பெற்றோருடன் தொடர்பு ஏற்படுத்தித் தரவும் அதன் பின்னர் ஆலோசனை நடத்திவிட்டு ஒரு சட்டத்தரணியை ஏற்பாடு செய்கிறோம்.

13 மாதங்களுக்கு மேலாக சிறைச்சாலையிலும் இராணுவ முகாமிலும் சிறைவைக்கப் பட்ட எமக்கு போதிய மருத்துவ வசதியும் உணவு வசதியும் இல்லை என்பதற்கு எனது உடம்பிலுள்ள அம்மைத் தழும்புகளே சாட்சியாக உள்ளன. எனது தோழர்களும் சிறையில் இம்சைப்படுத்தப் படுகிறார்கள். தினமும் மயங்கிய நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள். போதிய மருத்துவ உணவு வசதிகள் இல்லை.

இனிமேல்திமாண்ட் சிறையிலிருந்துகொண்டு பெற்றோருடன் தொடர்பு கொள்ளலாம் நல்ல உணவு தரப் படும்எனக் கூறியநீதிபதி மேல்விசாரணையை நவம்பர் 15ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

திருமலையைச் சேர்ந்த டொன் சில்வெஸ்டர் அல்லது நவம் (வயது 19)என்பவர்மீது இதே குற்றச் சாட்டு சுமத்தப் பட்டிருந்தது. குற்றப்பத்திரம் தமிழில் இல்லாத காரணத்தால் முதலில் அதனை ஏற்கமறுத்த இவர் இன்னும் ஒரு வாரகாலத்தில் தமிழ் பிரதி வழங்கப்படும் என நீதிபதி உறுதியளித்ததை அடுத்து சிங்களத்தில் இருந்த பத்திரத்தை ஏற்றுக்கொண்டு தமது கைது குறித்தும் அரசின் கொடுமைகள் குறித்தும் சில வார்த்தைகள் கூற முற்பட்டபோது விசாரணையில் எல்லாவற்றையும் கூறுமாறு தெரிவித்த நீதிபதி மேல்விசாரணையை இம் மாதம் 26ம் திகதி வரை ஒத்திவைத்தார்,

திருமலையைச் சேர்ந்த மயில்வாகனம் லிங்கேஸ்வரன் அல்லது ஈஸ்வரன் என்ற 20வயது இளைஞர் தமிழில் குற்றப் பத்திரம் இல்லாததால் அதனை ஏற்க மறுத்தார்.

ஒரு வாரத்தில் தமிழில் குற்றப்பத்திரம் தருவதாகவும் குற்றப்பத்திரத்தை ஏற்றுக் கொண்டால் தடுப்புக்காவலிலிருந்துறிமாண்ட்சிறைக்குச் செல்லலாம் அங்கு நல்ல வசதிகள் உண்டு என நீதிபதி கூறிய போதிலும் குற்றப்பத்திரத்தை ஏற்க மறுத்த இந்த இளைஞர் கூறியதாவது,-

19 மாதங்களுக்குமேல் தடுப்புக் காவலில் இருக்கும் எனக்கு பெற்றோருடன் எதுவித தொடர்பும் இல்லை இவ்வளவு நாட்களும் தடுப்புக் காவலில் இருந்த எனக்கு இன்னும் சில நாட்கள் இருப்பதால் கஷ்டம் இல்லை

இதை அடுத்து நீதிபதி இம் மாதம் 30-ம் திகதி இந்த இளைஞரை ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்

சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் ஆஜரான கனகராயன்குளத்தைச் சேர்ந்த சண்முகம் சோமசுந்தரம் அல்லது சிவலிங்கம் (29 வயது) குற்றப் பத்திரத்தை ஏற்றுக் கொண்டார். அரசு ஏற்பாடு செய்யும் சட்டத்தரணி தேவையில்லை என்றும் பெற்றோருடன் ஆலோசனை செய்தபின்னர் சட்டத்தரணியை நியமிப்பதாகக் கூறியபின்னர் மேல் விசாரணை நவம்பர் 21-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதே குற்றச்சாட்டின்பேரில் குற்றப்பத்திரம் வழங்கப்பட்ட கனகராயன்குளத்தைச்சேர்ந்த இராசையா சண்முகலிங்கம் அல்லது சண்முகம் அரசு நியமிக்கும் சட்டத்தரணி தமக்கு வேண்டாம் என்றும் தாம் பின்பு சட்டத்தரணி ஒருவரை நியமிக்க இருப்பதாகவும் கூறியதை அடுத்து மேல்விசாரணை நவம்பர் 22 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வடபகுதியில்

# உருளைக் கிழங்குசெய்கையில் 6 கோடி ரூபா நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

''வடபகுதியில் உருளைக் கிழங்குச் செய்கையால் கடந்த காலப்பகுதிகளில் 6 கோடி ரூபா நட்டமேற்பட்டுள்ளது. உருளைக் கிழங்குச் செய்கையில் 20 வீதம் யாழ். மாவட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரமான வெளிநாட்டு விதை கிழங்குகள் வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட வாடல் நோயே இச் செய்கையின் வீழ்ச்சிக்கும் ஏற்பட்ட நஷ்டத்திற்கும் காரணமாக அமைகிறது.''

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விவசாய கருத்தரங்கு விழாவில் யாழ். மாவட்ட விவசாயப்பணிப்பாளர் திரு ச. கிருஷ்ணபிள்ளை உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றமும் மானிப்பாய் ப. நோ. கூ. சங்கமும் இணைந்து நடாத்திய இவ்விழாவை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு வி. தர்மலிங்கம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

விவசாயப் பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில் வட பகுதியில் விளையும் நெல் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளது. அதேவேளை பருவமழை காலந் தவறிப்பெய்வதால் நெற்செய்கையில் பலத்த நட்டமேற்பட்டு வருகிறது. இந்நிலையில் அதிக விளைச்சலைப் பெற மழையின் பின் மூன்றரை மாதகாலநெல்லினத்தை பயிர் செய்வதன் மூலம் விவசாயிகள் அதிகவிளைச்சலைப் பெறமுடியுமென குறிப்பிட்டார். இத்துடன் பசுமைப் புரட்சியில் ஈடுபட்டு வரும் மக்களின் செயற்பாட்டையும் பாராட்டினார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விவுரையாளர் திரு. திரு. டி. குணராஜசிங்கம் கால்நடைகளின் பராமரிப்பும் செய்முறை விளக்கமும் பற்றி உரையாற்றினர்

விவசாய போதனாசிரியர்கள் திருவாளர்கள் வி. கந்தசாமி, க. கதிரமலை உட்பட பலர் இக் கருத்தரங்குகள் விவசாயிகளின் பிரச்னைகளை ஆராய்ந்து அவர்களுக்கு தொழிநுட்ப அறிவினை புகட்ட சந்தர்ப்பமளிக்கின்றதென பாராட்டினார்கள். (ச)

## திருக்கல்யாணம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வெங்கடேசர் ஆலய திருக்கல்யாண உற்சவதினமாகிய இன்று மாலை 3 மணிக்கு சுவாமி காசியாத்திரைக்குப் புறப்படுவதோடு மாலை 5 மணிக்கு சுவாமிக்கும் ஸ்ரீதேவி, பூமிதேவிக்கும் திருக்கல்யாண வைபவமும் ஆரம்பமாகும்.

இரவு 7 மணிக்கு சுவாமி தேவிமார்கள் சகிதம் பூந்தண்டிகையில் மணவாளக் கோலத்தில் வீதி உலா வருதலும் இடம்பெறும். (ச)

## இரு வியாபாரிகள் கைது

(வவுனியா)

வவுனியா பகுதியிலுள்ள பம்பைமடுவில் சோதனை நடாத்தச்சென்ற இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளொன்றைக் கைப்பற்றியதுடன் இரு வியாபாரிகளையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு வியாபாரிகளில் ஒருவர் பால் வியாபாரியான சிவகுமாரன் (22 வயது) எனத் தெரியவந்துள்ளது. (மா)

# இசைக் கலைஞர்கள் நடத்திய ஊர்வலம்

(மாவிட்டபுரம்)

வெலிக்கடைச் சிறையில் வாடும் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரியும், யாழ். பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அகில இலங்கை இசை வேளாளர் சங்கமும், இலங்கை இசைக் கலைஞர் சங்கமும் இணைந்து நேற்று மாபெரும் ஊர்வலமொன்றை நடத்தினர்கள்.

இணுவில் கந்தசுவாமி கோவிலிலிருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலம் யாழ் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தது பின்னர் யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குச் சென்று உதவி அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தது.

வட பகுதியிலுள்ள பல முன்னணி தவில், நாதஸ்வர, மிருதங்க வித்துவான்களும், இசைக் கலைஞர்களும் இந்த ஊர்வலத்தில் பங்குகொண்டனர். இவர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது ஊர்வலத்தில் பங்குகொண்டனர்.

இந்த ஊர்வலம் யாழ். பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தபோது இசைக் கலைஞர்களின் இந்த முயற்சியை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பெரிதும் பாராட்டினர்.

ஆயிரம் பேர்வரையில் இந்த ஊர்வலத்தில் பங்கு கொண்டனர்.

---

# அடகுநகை மறியல் தொடருகிறது

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்கள் மீண்டும் நேற்று இரண்டாவது தினமாக மறியல் செய்தார்கள்.

யாழ். நகரில் நேற்றுக்காலை பலத்த மழை பெய்தபோதிலும், மக்கள் வங்கிக்கிளைகளில் இம்மறியல் நடைபெற்றது. நண்பகல்வரை கிளைகளில் மறியல் இருந்ததனால் வங்கி ஊழியர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

நகைகள் கிடைக்கும்வரை மறியல் தொடர்ந்து நடைபெறும் என்று அடகுவைத்தோர் சங்கத்தினர் தெரிவித்தனர். (க)

---

# கொட்டும் மழையிலும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இளைஞரின் துயர்துடைக்கக் கோரி நீண்ட ஊர்வலம் நடத்தினர்கள்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் கோரிக்கையை ஏற்று நகரில் பல இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறந்தன.

அரசாங்க ஊழியர்களும் கறுப்புப்பட்டிஅணிந்து வேலைக்கு சென்றனர், ஆசிரியர்களும் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

ஊர்வலத்தில் மாணவிகள் சுலோக அட்டைகளுடன்முன் செல்ல அவர்களைத் தொடர்ந்து தாய்மார்களும் அதன் பின் மாணவர்களும் சென்றனர். இதே போன்ற மற்றும் இரு ஊர்வலங்களும் புறப்பட்டு நகரை நோக்கி வந்து மூன்றும் ஒன்றாக, கச்சேரி நோக்கி முன்னேறின.

'விசாரணை செய் அல்லது விடுதலை செய்' 'இளைஞர்களை சித்திரவதைக் குள்ளாக்காதே' 'சிறையில் பலியானவரின் பட்டியலை வெளியிடு' 'கொலையானவரின் விபரத்தை வெளியிடு' 'மாணவர் சக்தி மாபெரும் சக்தி' போன்ற வாசகங்கள் சுலோக அட்டைகளில் காணப்பட்டன.

ஊர்வலங்கள் ஒன்றாக இணைந்து கச்சேரி நோக்கி வந்தபோது முன்னால் ஒலிபெருக்கியில் மாணவர்கள் இலட்சிய கீதங்களை பாடிக்கொண்டு வந்தனர். கச்சேரியை மாணவர் சுற்றி வளைத்த பின்னர், முற்பகுதியில் கூடி தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டனர்.

அரசாங்க அதிபர் திரு.எம். பஞ்சலிங்கம், கொழும்பு சென்றிருந்ததனால், மகஜர் கச்சேரி மேல்மாடி திறந்த வெளி அரங்கில் மாணவர் முன்னிலையில் வைத்து, உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள மற்றும் பகுதிகளிலும், மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபரிடம் தங்கள் கோரிக்கைகளை தெரிவித்தார்கள்.

---

## மகஜர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கீழ்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய முழுப் பொறுப்பையும் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறோம் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகஜர் மேலும் கூறுவதாவது:-

"1. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்க் கைதுசெய்யப்பட்டு 18 மாத காலம் முடிவுற்று இதுவரை விடுதலைசெய்யப்படாமல் இருக்கும் இளைஞர்களை விடுதலைசெய்யவேண்டும்; அல்லது விசாரணைசெய்ய வேண்டும்."

"2. இரு வாரங்களுக்கு ஒரு தடவை குறைந்தது பத்து பெற்றோர், உறவினர் அடங்கிய குழுவொன்றைச் சந்திக்க வைக்கவேண்டும்."

"3 அரசியல் கைதிகளுக்கு உணவு, உடை, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் ஒழுங்காகக் கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்."

"4. சிறைகளிலும், முகாம்களிலுமுள்ள இளைஞர்களின் நிலைகுறித்து அவர்களின் பெற்றோர்களுக்கு அல்லது உறவினர்களுக்கு அவ்வப்போது அறியத்தரவேண்டும்". (க)

---

## இந்துவை...

1 ம் பக்கத் தொடர்ச்சி]

கூறினர்.

"இனப்பிரச்சினையைத் தீர்க்க தற்பொழுது பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பிரச்சினை தீரும்வரை மக்கள் அமைதியாக இருக்கவேண்டும். எந்தவிதத் தீர்வு பற்றியும் மக்களுக்கு முதலில் அறிவிக்கப்படும். பின்னர் பாராளுமன்றத்தில் ஆராயப்பட்டு இறுதித் தீர்மானம் மேற் கொள்ளப்படும்" என்று தெரிவித்த ஜனாதிபதி;

"'இந்து' பத்திரிகை, இலங்கைக்கும் அதன் தலைவர்களுக்கும் எதிராகப் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறது. அந்தப் பத்திரிகையை நம்பவேண்டாம் உண்மையை அறியவேண்டுமானால் என்னைக் கேளுங்கள். அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக என்னிடம் கேள்விகள் கேட்கப்படுகின்றன: அந்த விஷயத்தைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை" என்றும் கூறினர்.

---

## கிளிநொச்சி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரென வந்துநின்றது. லொறிச் சாரதி லொறியை நிறுத்திவிட்டுதப்பியோடியதையடுத்து இந்த லொறி பலத்த சத்தத்துடன் வெடித்தது.

"இதனையடுத்து பொலிஸ் நிலையத்திலும் அதனை அடுத்துள்ள சுற்றுடலிலும் தீப்பிடித்துக்கொண்டது இதேவேளை தீவிரவாதிகள் ராக்கெட் மூலமான தாக்குதலை பொலிஸ் நிலையத்தின்மீது மேற்கொண்டனர் இத்தாக்குதலில் ஒன்பது ஆயுதப் படையினர் எரிகாயங்களுக்குள்ளாகினர். இவர்களில் மூன்றுபேரின் நிலைமை தற்போது கவலைக்கிடமாக உள்ளது இந்த ஒன்பது பேரும் சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்

"பொலிஸ் நிலையத்தின் இரு பகுதிகளில் பீரங்கித்தாக்குதல் கடூரமாக நடைபெற்றது இதன்பின் பெற்ரோல் நிரம்பிய பவுஸர் ஒன்று பொலிஸ் நிலையத்தின் முன்னால் திடீரென வந்துநின்றது அதன் சாரதி தப்பி ஓடிவிட்டார். தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தபடி இந்த பவுஸர் வெடிக்கவில்லை.

பவுஸர் வெடித்திருந்தால் கிளிநொச்சி நகரமே தீப்பிடித்து பெருமளவுக்குச் சேதமாகியிருக்கும் ஏனெனில் பொலிஸ் நிலையத்தின் எல்லை அருகே இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் சேமிப்பு 'குதம்' அமைந்துள்ளது. இந்த பவுஸர் வந்துநின்றதை அடுத்து தீவிரவாதிகளின் எதுவித தாக்குதலும் நிகழவில்லை. பின் மீண்டும் பீரங்கித் தாக்குதல் திடீரெனத்தொடர்ந்தது. இத்தாக்குதல் சுமாராக 6 மணித்தியாலங்களுக்கு நீடித்தது.

"இந்த ராக்கெட் மோட்டர் தாக்குதலில் மூன்று நீண்ட இரும்புக் குழாய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு ராக்கெட் மோட்டர் தாக்குதலில் ஈடுபட்டிருந்த மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

'இந்த ராக்கெட்தாக்குதலில் பயன்படுத்தப்பட்டுள்ள ராக்கெட் மோட்டர்கள் உள்ளூர் தயாரிப்புகளே. இவை மிகத் தரமான உற்பத்திகளாக உள்ளன. இதுபோன்ற உற்பத்தியை எனது இராணுவ வாழ்க்கையில் கண்டதில்லை" என்று மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்

'இத்தாக்குதலின் போது நடைபெற்ற ராக்கெட் தாக்குதல்கள் கிளிநொச்சிபொலிஸ் நிலையத்திலிருந்து காலைமைல் தூரத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டதாகக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது

"கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தாக்குதலின் போது காயமடைந்தவர்களின் தொகை ஒன்பது பேராகும் இவர்களில் நான்கு பேர் இராணுவ வீரர்கள். நான்கு பேர் பொலிஸ்காரர்கள். ஒருவர் உயர் அதிகாரி. இத்தேவேளை தாக்குதல் நடைபெற்ற போது பொலிஸ்நிலையத்தில் ஒரு உயர் அதிகாரியும் 39 பொலிஸாரும் 57 இராணுவ வீரர்களும் இருந்தனர்,

இத் தாக்குதலில் சுமாராக 75 தீவிரவாதிகள் ஈடுபட்டிருந்தார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

இத்தாக்குதலை அடுத்து பயங்கரவாதி எனச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் மேலும் கிளிநொச்சி சந்தையினுள் சந்தேகத்துக்கு இடமான முறையில் இருந்தார்கள் என்பதன் பேரில் சிலரைப் பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்" (அ-ரா)

---

# தமிழ் நாடு நேற்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் தமது துணைவியார் வி என். ஜானகியுடன் அண்ணா சமாதிக்கருகில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டார். அவருடன் மின்சாரத்துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், அ இ அ தி மு. கழகப் பொதுச் செயலாளர் திரு. எஸ் இராகவானந்தம், கட்சி அவை முன்னவர் திரு. ஈ வே. கி. வள்ளிமுத்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தலைவர் திருமதி சுலோசனா சம்பத், நாடாளுமன்ற உறுப்பினர் திரு வலம்புரி ஜோன், திரு. குழந்தைவேல், திரு. ஆலடி அருணா, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி வளர்மதி, திரு. துரைசாமி, உலகத் தமிழ் இளைஞர் மன்றத் தலைவர் திரு இரா. ஜனார்த்தனன் உட்படப் பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

உண்ணாவிரதத்தில் பெருவாரியாகப் பெண்கள் காணப்பட்டனர்.

அண்மையில் நாடு கடத்தப்பட்ட பின்னர் இந்திய நாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட திரு. எஸ். சி. சந்திரகாசன், அமெரிக்காவிலுள்ள ஈழத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. தில்லையம்பலம் ஆகியோரும் இங்கு உண்ணாவிரதம் இருந்தார்கள்.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு நிதிக்காக முதலமைச்சருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த உண்டியல்களில் ஆயிரக்கணக்கானோர் நிதி வழங்கினார்கள்.

மெரீனா, காந்தி சிலைக்கு அருகில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் மத்திய சமூக நல மகளிர் நலத்துறை இணை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு சிவாஜிகணேசன், திரு. திண்டுவனம் இராமமூர்த்தி, திரு. தங்கபாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி யசோதா, டாக்டர் சவரிராஜன், திரு. வேணுகோபால், திரு தங்கவேலு, திரு முனுசாமி தமிழ்நாடு இளைஞர்காங்கிரஸ் தலைவர் திரு. ஜெயமோகன் உட்பட ஆயிரக் கணக்கானோர் உண்ணாவிரதம் இருந்தனர்.

தமிழ்நாடு ஆதி ஆந்திர ஆதி திராவிட சேவா சங்கம், தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மைப் பிரிவு ஆதி திராவிடர் மற்றும் ஆதி ஆந்திரா பொது நல தேசிய சங்க அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் பெருவாரியான பெண்களும் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்கள்.

அண்ணாசாலை காமராஜர் சிலைக்கருகில் ஜனதாகட்சியைச் சேர்ந்த ஐநூறுக்கும் அதிகமானவர்கள் அந்தக் கட்சியின் தமிழ்நாட்டுப்பிரிவுத் தலைவர் திரு. இரா செழியன் தலைமையில் உண்ணாவிரதம் இருந்தனர்.

தியாகராஜா நகரிலுள்ள காமராஜர் நிலையத்திற்கு முன்னதாக காந்தி காமராஜ்தேசிய கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானவர்கள் அக்கட்சியின் தலைவர் திரு குமரி அனந்தன் தலைமையில் உண்ணாவிரதம் இருந்தார்கள்:

திருவல்லிக்கேணிப் பகுதியில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநில செயலாளர் திரு. நல்லசிவன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. ரமணி திரு. என். சங்கரய்யா, திண்டுக்கல் வரதராஜன், திருமதி. ஜானகி உட்பட பலர் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

மயிலாப்பூர் பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு அழகிரிசாமி தலைமையிலும், துறைமுகப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கம் தலைமையிலும் ஏராளமானோர் உண்ணாவிரதம் இருந்தார்கள்

அம்பேத்கார் மக்கள் இயக்கத்தினர், அரசினர் ஸ்ரான்லி மருத்துவமனை தமிழ்ச்சங்கம், 107வது வட்ட சர்வகட்சி அமைப்பு, சென்னை துறைமுக ஐக்கிய தொழிலாளர் யூனியன், சென்னை பெருநகர் அனைத்துப் பள்ளி ஆசிரியர்மன்றம், தமிழ்நாடு பொதுப் பள்ளித்துறை பொறியியலாளர் சங்கம், தமிழ்நாடுநெடுஞ்சாலைத்துறை பல்வேறு அமைப்புகள், தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரிய ஆட்சிப்பணியாளர் சங்கம், ஆட்டோ ஓட்டுநர் சங்கம், பர்மாதமிழர் முன்னேற்றச் செயலகம் உட்பட பல தொண்டர் நிறுவனங்களும் உண்ணாவிரதத்திலும், ஹர்த்தாலிலும் கலந்து கொண்டன.

தென்னிந்திய திரைப்பட நடிகர்கள், சங்கத்தில் தலைவர் திரு ராஜேந்திரன் தலைமையில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்

தமிழ் நாடு இயல், இசை நாடக மன்றசெயலர் திரு. ரி. வி நாராயண சுவாமியும் இதில் கலந்து கொண்டனர்

தமிழ்நாடு அரசு தட்டச்சு சுருக்கெழுத்து சங்க உறுப்பினர் பொது நூலக இயக்கப் பணியாளர்கள், அலுவலர்கள் சென்னை நகர் தேசிய சிறு வியாபார உறுப்பினர்கள் ஆகியோரும் உண்ணாவிரதமிருந்தனர்.

செங்கல்பட்டு பல நிலையத்தில் அ. தி. மு. க கொள்கை பரப்புச் செயலாளர் செல்வி ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்தார்.

சென்னையில் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. பிரதான பேருந்து நிலையங்களும், எழும்பூர், சென்றல் ரயில் நிலையங்களும் வெறிச் சோடிக் கிடந்தன.

சென்னையில் 65 இடங்களில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டதாக தலைமைச் செயலாளர் திரு. ரி. அனந்தன் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

---

## செய்தியாளர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தின் சேதநிலைமைகள், அங்கிருந்த ஆயுதப்படையினருக்கு ஏற்பட்ட சேதம், காயமடைந்தவர்களை சிகிச்சைக்காக ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு ஏற்றிச் செல்லல், பொலிஸ் நிலையத்தின் முன்பு வெடித்துச் சிதறிய லொறியின் சிதறல்கள், தாக்குதலுக்குப் பயன்படுத்திய ராக்கட் மோட்டர்கள், ராக்கட் மோட்டர்களை இயக்கிய நிலையில் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று தீவிரவாதிகளின் சடலங்கள், கிளிநொச்சி சந்தையில் சந்தேகத்துக்கு உரியவர்கள் என்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்றமை போன்ற விபரங்களை இப்படத்தில் காணக் கூடியதாக இருந்தது.

ராக்கெட் மோட்டர்களை இயக்கிய நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று தீவிரவாதிகளில் ஒருவர் சீருடையிலும் சுமாராக 15 வயதுள்ள இளைஞன் ஒருவன் கட்டைக் காற்சட்டை, ஷேர்ட்டும் அணிந்திருந்தார். மற்றவர் சாரமும், ஷேர்ட்டும் அணிந்திருந்தார். சந்தையில் பிடிபட்டவர்களை நிராயுதபாணிகளாகக் கைகளைத் தலைக்கு மேலே தூக்கியபடி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட காட்சிகளை இந்த "வீடியோ" படத்தில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(அ-ரா)

# 'அந்தத்' தமிழகம் நோக்கி .....

— தி. பொன்னம்பலவாணர்

[13]

மதுரை மாநகரத்தின் நடுநாயகமாக விளங்கும் சோமசுந்தரப் பெருமான் கோவிலின் சித்திரைப் பூரணையைப் பிரதானமாகக் கொண்டே வருடாந்தத் திருவிழாக்கள் நடைபெறும். இவ்வாண்டுத் திருவிழாவில் சிலவற்றைத் தரிசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

மதுரைக் கோவிலைப் பொறுத்தவரை தினம் சுவாமி தரிசனம் செய்யச் செல்லும் மக்கள் கூட்டமும் - கோவிலில் காணப்படும் குதூகலமான பொலிவும் ஒவ்வொரு நாளும் மதுரையில் திருவிழாவோ என்று கருதச் செய்யும்

மதுரைச் சொக்கநாதரின் 64 திருவிளையாடல்களைப் பாடிய பரஞ்சோதி முனிவர் அக்காலத்திலேயே பலவிதமான மங்கல ஓசை நிறைந்ததாக மதுரை மாநகரம் தினமும் விழாக்களுடன் விளங்கியது என்று பாடுவார்

கோபுரங்களின்தொகையும், அழகும் மிக்கது மதுரைக் கோவில். திருவிழாக்காலங்களில் கோயில் மதில்கள், பொற்றாமரைக்குளம், கோபுரங்கள் எல்லாம் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தசிறப்பு கலையுணர்ச்சி மிக்கதாகவே இருந்தது. நாலுகவே மின்விமறையும் மின் அலங்காரத்தில் ஒரு கோபுரத்தில் யானை மணியடிப்பது போலவும்பொற்றாமரைக்குள மதிலில் சிவலிங்கப் பெருமானுக்கு பூசை நிகழ்வது போலவும் அலங்கரித்திருந்த மின்சார சோடனை கைவந்த தமிழ்க்கலையுணர்ச்சிக்கு சுவாரசிகரமான உதாரணமாக இருந்தது

மதுரையில் நடைபெறும் திருவிழாக்களில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கல்யாணவிழாவே பிரபல்யம் மிக்கதும் சிறப்புடையது மாகும்.

சுமார் இரண்டாயிரம் பேர் ஒரே சமயத்தில் தரிசிக்கத் தக்க மண்டபத்தில் திருக்கல்யாண விழாவுக்கான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள் ஆனால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தாம் நிற்குமிடங்களில் நின்றவாறே திருக்கல்யாண வைபவங்களைத் தரிசிக்கத்தக்க வகையில் கோவிலின் பல இடங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளை அமைத்திருந்தார்கள். இதில் சிறப்பென்ன வென்றால் தொலைக்காட்சி வியாபார நிறுவனம் ஒன்றே இப்பணியைத் தனது உபயமாகச் செய்திருந்தது

மதுரைத் தேர்திருவிழாவின் போது சோமசுந்தரப் பெருமானும் மீனாட்சியம்மையாரும் பவனி வந்த தேர்கள் ஆலயத்தின் பெருமைக்கு ஏற்றனவாய் விளங்குகின்றன. சுவாமி இருக்கும் பீடத்துக்கு மேல் அழகிய துணிகள் கட்டப்பட்டதாகவும் கீழே இத்பங்கள் நிறைந்த பெரிய உருப்படிகளாகவும் தேர்கள் விளங்குகின்றன.

மதுரையில் வெளிவீதி வரும்போது சுவாமி கோவிலை அடுத்துள்ள வீதியாக் செல்லாது சுமார் 100 — 150

## தினமும் விழாக்கோலமாக காட்சிதரும் மதுரை மீனாட்சி திருத்தலம்!

யார் தூரத்தில் உள்ள பெரிய வீதியாலேயே தேர் சென்ற வீடுகள், பலகடைகள் மட்டுமன்றி சுவாமி உலாவரும் வீதிக்கும் கோவிலுக்கும் இடையில் கிராமதேவதைகள் போன்ற தெய்வங்கள் அரசியல் தலைவர்களின் சிலைகள் பல ஆங்காங்கு காணப்பட்டன தேர் முதலிய சகல திருவிழா நாட்களிலும் வெளிவீதியில் சுவாமி வருவதற்கு முன்னர் யானை, ஒட்டகம் என்பன செல்கின்றன இவற்றுடன் சிறிய எருது ஒன்றின் முதுகில் சிறிய முரசு ஒன்றை வைத்து அடித்துச் செல்கின்றனர். இவற்றைத் தொடர்ந்து விநாயகர் வேலவர், தேர்கள் சென்றபின்னர் பெருத்த ஆரவாரத்துடனும் அடியார்களின் பெருமுயற்சியுடனும் சுவாமி அம்மன் திருத்தேர்கள் அசைந்து வருகின்றன;

மதுரைத் தேர்த்திருவிழாவின்று சித்திரை வெய்யிலில் புளுங்குபவர்கட்கு விசிறிகளை அன்பளிப்புச் செய்வது ஒரு மரபான தருமமாக காணப்பட்டது. வசதி படைத்த வியாபாரிகள் தங்களுக்கு விளம்பரம் தேடும் வகையில் விசிறியின் ஒருபக்கத்தில் தம் தொழில் விளம்பரத்தையும், மறுபக்கத்தில் மீனாட்சி கல்யாணக்காட்சி சிவன் அம்பாள் படம் என்பவற்றை அச்சிட்டுத் தருமம் செய்யும் போதே விளம்பரமும் செய்துவிடுகின்றனர் நம்மிடங்களில் தண்ணீர் பந்தல் அன்னதானம் மட்டும் செய்பவர்கள் இப்படியான செயல்களையும் புரிவது வரவேற்கத்தக்கது இதேபோல மீனாட்சி திருக்கல்யாணத்தின் போது சுமங்கலிகளான பெண்களுக்கு மஞ்சள் - குங்குமம் மஞ்சள்கயிறு என்பனவற்றை வழங்கியும் பலர் தர்மகைங்கரியங்களைச் செய்யும் வழக்கத்தைக் கண்டேன்.

(தொடரும்)

## நிர்வாகிகள்

புலோலி)

புலோலி அறிவகம் சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. அ. செல்வரத்தினம், உப. தலைவர். திரு. எம். திருச்செல்வம், இணைச் செயலாளர்கள் திரு. ச. ஸ்ரீ பவான், திரு. க. மகேந்திரராசா, பொருளாளர் திரு. இரா. பத்மநாதன்;

11 பேர் கொண்ட நிர்வாக சபை யொன்றும் தெரிவானது!

## இன்றைய பலன்

மாதம்; புரட்டாதி
திகதி: 9 (25-9-85)
கிழமை: புதன்கிழமை
திதி: துவாதசி
நட்சத்திரம்: திருவோணம்

மேடம்: கனிவான நிலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்லுவீர்கள், சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்குமிடமுண்டு. பொருள்ஈட்டுவதில் புதிய வழிகளையும் கையாளுவீர்கள்;

இடபம்: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள், மனதில் புதிய எண்ணம் வட்டமிடும், உல்லாசப் பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்: சிந்தனை சிலந்திகளின்னும், தனிமையைப் பெரிதும் விரும்புவீர்கள், கடமையில் தளர்ச்சி காணப்படும், முன்னெச்சரிக்கையுடன் கடமையாற்றவும்,

கடகம்: வாழ்விலும் வசதிகள் பெருகும், பொதுத்துறையிலும் நாட்டமுண்டு, காதலர்களுக்குப் பொன்னாள்:

சிங்கம்: தொடங்கிய வேலைகளில் இடையில் தடைப்படலாம். பொருள்விரயத்திற்கு மிடமுண்டு, அதிகப்பேச்சினைத் தவிர்த்து காரியத்தில் கவனமாக இருக்கவும்.

கன்னி: தந்தைவழித்தனமுமுண்டு, வரவிலும் திருப்திகரமான நிலைதென்படும், முயற்சியாலும் முன்னேற்றமுண்டு, குடும்ப மகிழ்ச்சியுமுண்டு,

துலாம்: இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம், புண்ணிய விருத்திக்கு மிடமுண்டாம், புதுத்தொழில் முறைகளை மனம்நாடும்.

விருச்சிகம்; இனபந்துக்களுடன் தொடர்புகள் பெருகும், பம்பரம்போல சுழன்று பணியாற்றுவீர்கள், பாராட்டுதலுக்கும் இடமுண்டு, இல்லற வாழ்வும் சிறக்கும்;

தனுசு: அவசரம் வேண்டாம், ஆயுதபீடைக்கும் இடமுண்டு, நின்று, நிதானித்து, செயலாற்றிலல் அமைதி உன் காலடியில்வந்துசேரும்.

(7-ம் பக்கம் பார்க்க)


Accounting — Auditing & Tax work

உங்கள் ஸ்தாபனங்களின் இலாப நட்ட வருமானவரிக் கணக்குகள் தயாரிக்க, கணக்குகள் பரிசோதிக்க AUDIT நாள், மாதாந்த, வருட அல்லது அரைவருட கால சேவைக்கும்

அங்கீகரிக்கப்பட்ட பிரபல கணக்காளர்களினால்

யாழ். நகரில்:

North Ceylon Technical Association-
Finance Division

14, ST. PETERS LANE HOSPITAL ROAD, JAFFNA.
TELEPHONE: 24355.





"கண்ணன் சொன்னான் கீதையிலே கடமையைச் செய்வாய் பாரினிலே."

அன்பளிப்பு: மில்க்வைற், யாழ்ப்பாணம்.

"வல்லிபுரக் கோவிலில் சகாய விற்பனை"

27–9–85 வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழாவன்று மில்க்வைற் விளம்பர வாகனத்தில் ரூபா 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு

★ அழகிய கிருஷ்ணர் ஸ்ரிக்கர் ★ பொலித்தின் பாக்
★ அறிவு நூல்கள் ★ மில்க்வைற் செய்தி
★ வீட்டுத் தோட்டத்துக்குரிய விதைகள்

யாவும் இலவசமாக வழங்கப்படும்.
மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து
சிறந்த பரிசுகளை பெற்றுக்கொள்ளலாம்

மில்க்வைற் — யாழ்ப்பாணம்.



இப்பொழுது நடைபெறுகிறது

Diploma in Nursing
Diploma in Pharmacy
Diploma in Motor machanism

இவற்றுடன்

6-10-1985 இலிருந்து ஆரம்பம்

Diploma in Air condition & Refrigerator, T. V. & Radio Electronics Training

&

Draftsmanship Course
(கட்டிடப் படம் வரைதல்)
Short hand, Typing

வகுப்புகளும்

இவற்றுடன்

English Language Classes உம்
நடாத்தப்படும்

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane, Hospital Road, Jaffna.
Telephone: 24355.

## சங்கம் புனரமைப்பு

(மாவிட்டபுரம்)

வசாவிளான் பகுதியில் புனரமைக்கப்பட்ட பாவனையாளர் பாதுகாப்பு சங்கம் மாதா மாதம் கூடும் போது அப் பகுதியில் உள்ள கடைச் சொந்தக்காரர்களையும் அழைத்து ஆலோசனை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம் பல காலமாக இயங்காதிருந்ததால் மீண்டும் புனரமைக்கும் கூட்டம் பகுதி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. கே. சிவதனன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி சங்கத் தலைவராக திரு. க. முத்தையாவும், உப தலைவராக திரு. ம. எட்வேட்டும், செயலாளராக திரு. சு. இலிங்கநாயகம், உப- செயலாளர் தி. யோ. அருளானந்தம், பொருளாளர் திரு. இ. இராசலிங்கம், 6 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.


திரைக்குவராத புதியபடம்

**உஷா மினி**

10-30, 2-30, 4-45 6-45

THE LAST HUNTER

விறுவிறுப்பான தாக்குதலைக் இதுவரை வெளிவந்த படங்களிலும் அதிசிறந்த படம்.

**லிபேர்ட்டி மினி**

10-30, 2-30, 4-45, 7-00

TORSO

பயங்கரம், திகில் கொலை வயதுவந்தவர்கள் மட்டும்

**ஸ்ரான்லி மினி**

இரண்டாவது திரைவாரம்

10-30, 12-30, 2-30, 4-30, 6-30

TanzaniaIsland

தங்களை வளர்த்த பெண்ணிற்கே அட்டூழியம் புரியும் ஒரு ராட்சத மனிதக் குரங்கின் கதை பார்க்கத் தவறாதீர்கள்.

**சரவணபவன் மினி சினிமா**

(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

4 ல் 4 திரையில்

GAME OF DEATH

FIST OF FURY

ENTER THE DRAGON

BIG BOSS

ஆகிய படங்களின் சண்டைக் காட்சிகள் தொகுக்கப்பட்டது புரூஸ்லியின் அதிசிறந்த கராட்டிச் சண்டைகளை இரு மணித்தியாலங்கள் பார்த்து மகிழுங்கள்;

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30,

பாக்கியராஜ்- அம்பிகா நடித்த

அந்த ஏழு நாட்கள்

**வின்ஸர் சினிமா**

10-30, 2-30, 6-30

2-வது வாரமாக ஓடுகிறது!

சிவகுமார், மோகன், விஜயகாந்த், ராதா, ரேவதி நடித்த

நாளை

திங்கள் கேட்டவை

[illegible]


# அடகுவைத்தோர் மறியல் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய மக்கள் வங்கிக்கிளைகளில் நகைகள் அடகுவைத்தவர்கள் தங்கள் நகைகளை மீளப்பெறும்வரை தொடர்ச்சியாக மீண்டும் மறியல் போராட்டம் நடத்தப் போவதாக, அடகுவைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

அடகு வைத்தோர் சங்கம் எதிர்பார்த்தபடி பயனுள்ள நடவடிக்கைகளை வங்கிநிர்வாகம் எடுக்காததினால், சங்கம் கடந்த சனிக்கிழமை கூடி மக்கள் வங்கிக்கிளைகள் முன்னிலையில் போராட்டம் நடத்துவதென முடிவு செய்திருந்தது. அந்த முடிவுப்படி நேற்றுத்திங்கட்கிழமை மறியல் போராட்டம் ஆரம்பமானது. (மா)

## செட்டிகுளம் அகதிகள் தமது கிராமசேவையாளர்களை வவுனியா கச்சேரியில் சந்திக்கலாம்

(வவுனியா)

இடம்பெயர்ந்து சென்றுள்ள செட்டிகுளம் அகதிகள் தத்தமது கிராமசேவையாளர்களை ஒவ்வொரு புதன்கிழமையும் வவுனியா கச்சேரியில் திறக்கப்பட்டுள்ள விசேட பிரிவில் சந்திக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய உணவு முத்திரைத் திட்டம் அமுலுக்கு வர இருப்பதினால் செட்டிகுளம் பகுதியிலிருந்து வெளியேறிச் சென்றுள்ள மக்கள் தமது உணவு முத்திரை பெறுவதற்காக குடியிருப்பாளரினால் பூர்த்தி செய்யப்படவேண்டிய படிவத்தினை தத்தமது கிராமசேவையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே வேறிடங்களில் தங்கியுள்ள செட்டிகுளம் அகதிகள் உடனடியாக தமது கிராம சேவையாளரை சந்தித்து குறித்த படிவத்தினை பெற்றுக் கொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகின்றது.

## பிரெஞ்சு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

னமே மூழ்கடித்தது என்பதை பிரான்ஸ் ஒப்புக் கொண்டுவிட்டது. இதனைத் தொடர்ந்தே பிரெஞ்சு அரசுக்கு நெருக்கடி நிலை தோன்றியுள்ளது

பிரான்சில் தற்போது வீட்டுக்கு வீடு இந்த 'கிறீன் பீஸ்' விவகாரம் குறித்தே பேசப்படுகின்றது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் யாவும் இவ்விவகாரத்தைப் பல்வேறு கோணங்களிலும் விமர்சித்து வருகின்றன

புதிய பிரான்ஸ் பாதுகாப்பமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள போல் கில்ஸ் நியூஸிலாந்து கிறீன்பீஸ் விவகாரம் குறித்து தமது வருத்தத்தை வெளியிட்டுள்ளார் அத்துடன் தாம் நேற்றுமுன்தினம் பதவி ஏற்பதற்கு முன்னர் பிரெஞ்சு புலனாய்வு ஸ்தாபனத்தின் 'றெயின்போவேரியர்' விவகாரம் குறித்த கோவைகள் அழிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரெஞ்சு அரசாங்கம் இவ்விவகாரம் குறித்து நியூஸிலாந்திடம் மன்னிப்புக் கோரியுள்ள போதிலும் நியூஸிலாந்து பிரதமர் திரு. டேவிட் லாங்கே இம்மன்னிப்பு எந்த வகையிலும் தமது நாட்டைத் திருப்திப்படுத்தாது என்று தெரிவித்துள்ளார்

இதேவேளை நியூஸிலாந்தின் கிறீன்பீஸ் அணு ஆயுத எதிர்ப்பு இயக்கம் தனது கப்பல் ஒன்றை மீண்டும் தென் பசுபிக்கிலுள்ள பிரான்சின் அணுசக்தி ஆராய்ச்சி வலயத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. (இ)


**எம்பயர்**

7 அடித் திரையில்

(வைத்தீஸ்வரா சந்தி)

தினசரி 10-30, 2-30, 6-30, இரவு 9-00

சிவகுமார், சரிதா, ஜீவிதா நடித்த

சுகமான ராகங்கள்

(புதிய பிரதி)


## இயக்குநர் சபை ராஜினாமா

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத்தலைவர், உப, தலைவர் உட்பட ஆறு இயக்குநர்சபை உறுப்பினர்களும் இராஜினாமாச்செய்துள்ளனர். சங்கத்தின் தற்காலிக தலைவராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்தே யாழ். சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ரீ தணிகாசலத்தை சங்க தற்காலிக இயக்குநர் சபைத் தலைவராக நியமித்துள்ளார்;

## உரவாரம் கருத்தரங்கு

(சுண்டுக்குளி)

தேசிய உரவாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட உர விநியோகஸ்தர்களுக்கான கருத்தரங்கும் கலந்துரையாடலும் நாளை 26ம் திகதி காலை பண்டத்தரிப்பு ப. நோ. கூ சங்க மண்டபத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு கே சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக யாழ் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ் கணேந்திரன் கலந்து கொள்வார். உரப்பசளை மூலம் விவசாய உற்பத்திப் பெருக்கம் பற்றி பலர் உரையாற்றுவார்கள்.

## இன்றையபலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மகரம்; வீணான சந்தேகங்களுக்கும் ஆவாகுவீர்கள் பிறர் விடயத்தில் தலையிடுவதைத் தவிர்த்துக் கொள்ளவும், எதையும் சிந்தித்துப்பின் செயலாற்றவும்.

கும்பம்: குடும்பஸ்தர்களின் வாழ்க்கையில் வசந்தம் மலரும், பொருள்வரவுமுண்டு, தொழில் நிலையில் சமநிலை தோன்றும்;

மீனம்; அரசபயமுண்டு, தொழில் விடயத்தில் நிதானமாகச் செயல்படவும்; வீண் பழிக்கும் ஆளாகலாம் பிறர் விடயத்தில் முன்னெச்சரிக்கை நன்று.

திருமலை

வே. ரவீந்திரன்

## இப்படியும் நடக்கிறது

"ட்ரிங்...... ட்ரிங்......" வழக்கம்போல தொலைபேசி அழைத்தது.

"ஹலோ யார் பேசுறீங்க...... நீங்களா...... பரவாயில்லை......"

அறிமுகமில்லாதகுரல். ஆனால் மிகவும் ஆர்வத்துடன் ஒலித்தது அந்தக்குரல் தொடர்ந்தது!

"......ஒன்றுமில்லை; உங்கள் குரலை, பொதுவாக யாழ்ப்பாணத்து தமிழ்க்குரலைக் கேட்க சந்தோஷமாக இருக்கிறது. கடந்த ஒரு மாதமாக யாருடனும் தொலைபேசியில் பேசமுடியவில்லை. இங்கும் முன்னர் போல தமிழ் ஆட்கள் இல்லை. இருக்கும் சிலருடனும் பேசுவது கஷ்டமாக இருக்கிறது...... புதினங்களைச் சொல்லுங்க......"

இவ்வாறு வலிந்து குழைந்து பேசியது அந்த ஆண் குரல்.

தொலைபேசியில் பேசியது யார்? எந்த இடத்திலிருந்து?

லண்டனோ, பாரிஸோ, நியூயோர்க்கோ இல்லை. சாட்சாத் திருகோணமலை தான்!

— மைந்தன்

## "வாலிபர் கிறிஸ்தவ சங்கம் சகோதரத்துவ இயக்கமாகும்"

(சுண்டுக்குளி)

"வாலிபர் கிறிஸ்தவ சங்கம் ஓர் சர்வதேச சகோதரத்துவ இயக்கமாகும். இது எமது பூரண ஆளுமையை ஆத்மீக அறிவியல், உடற்பயிற்சி, வழிகாட்டல், தலைமைத்துவப் பயிற்சி, ஆகியவற்றின் மூலம் கட்டியெழுப்ப சந்தர்ப்பங்களும் வசதிகளும் அமைத்துக்கொடுக்கிறது. இளைஞர்களும் யுவதிகளும் பங்குபற்றும் இப்பயிற்சிப்பாசறை நவாலி வை. எம். சி. ஏ.யின் உயர்வுக்கும் உதவுகிறது";

இவ்வாறு வட்டு. லயன்ஸ் கழக தலைவரும் பாசறை இயக்குநருமான வயன் டபிள்யு என். தேவகடாட்சம் நவாலி வை. எம். சி. ஏ மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற 13வது வருடாந்த சர்வதேச இளைஞர் ஆண்டு பாசறை முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக இலங்கை வை எம் சி ஏக்களின் தேசிய சங்க அபிவிருத்திச் செயலாளர் திரு ஏ எஸ் விஜயகுலசிங்கம் கலந்து கொண்டு பாசறை குறுக்கோட்டப் போட்டி. புதையல் தேடல், கிம்ஸ் விளையாட்டு போன்ற புதிர்ப்போட்டிகளை செய்து காட்டினார்;

முதல்நாள் கொடியேற்ற வைபவத்தை உபதலைவர் திரு. ஜோசப் தொடக்கிவைத்தார். மஞ்சள் இல்லம் அதிக புள்ளிகளைப்பெற்றது; சிறந்த பாசறையாளன் என்ற கேடயத்தை திரு. எஸ். சுரேன்குமார் பெற்றுக்கொண்டார்; வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி புஷ்பமலர் தம்பிராசா பரிசில்களை வழங்கினார்.

## நிர்வாகிகள் தெரிவு

(மாவிட்டபுரம்)

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

போசகர்கள். திரு சி. சிவரதராசா. திரு. நா. முருகையா, திரு ஆ கந்தசாமி தலைவர். திரு. சி. சிவப்பிரகாசம், உப தலைவர் திரு. ஆ. சுகதேவன் செயலாளர் திரு: இ ஜெயகோபால் உப- செயலாளர் திரு மா அம்பழகன், பொருளாளர் திரு. சி. நடராசா.

9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை முருகேசு

திருமதி வள்ளியம்மை முருகேசு காலமானார். இவர் பொன்னாலை "சண்முக வாசா" வைச் சேர்ந்த காலம் சென்ற பொலிஸ் அதிகாரி முருகேசுவின் பாரியாரும், பரமேஸ்வரி, சிவநேஸ்வரி காலம் சென்ற (விமானப்படைத் தளபதி) குமாரசுவாமி, (பொலிஸ் அத்தியட்சகர்) மகேஸ்வரன், காலம் சென்ற (பொலிஸ் அத்தியட்சகர்), சண்முகம், ஞானாம்பிகை (ஆசிரியை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற கணேசன், கிருஷ்ணர், பொன்னையா, மனோன்மணி, நாகராணி, நொயிலா, பத்மாவதி ஆகியோரின் மாமியாரும், மலேசியா வேலுப்பிள்ளை கதிரவேலு, வேலுப்பிள்ளை கனகசபை, வேலுப்பிள்ளை கிருஷ்ணர், காலம் சென்ற வேலுப்பிள்ளை இராசா ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலம் சென்ற திருமதி சின்னத்தம்பியின் மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-9-85 புதன்கிழமை (இன்று) 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

898

ஈழநாடு
THE EELANADU
(NATIONAL TAMIL DAILY)

# தொல்புரத்தில் ரூபா 3 லட்சம் கொள்ளை

யாழ்ப்பாணம்)

தொல்புரத்திலுள்ள மரக்காலை உரிமையாளர் ஒருவரின் வீட்டில் நகை, பணம் உட்பட சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தொல்புரம் கலைச்சந்தியிலுள்ள கா. சுப்பிரமணியம் என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை நடைபெற்றுள்ளது.

சம்பவதினமிரவு 11-30 மணியளவில் ஆயுதங்களை சகிதம் வானொன்றில் வந்த ஒரு கோஷ்டியினரே இக்கொள்ளையை நடாத்தியுள்ளனர்.

வானில் வந்தவர்கள் உங்களுக்கு மரம் வந்திருக்கிறது கதவைத்திறவுங்கள் என்று கூறியதாகவும் அவர்கள் சந்தேகத்தில் கதவைத்திறக்காதிருக்க உதைத்துக்கொண்டு உள்ளே சென்ற கோஷ்டியினர் மரக்காலை உரிமையாளரின் மனைவியின் கழுத்தை நெரித்துத் தாக்கியதாகவும் அவர்களின் வளர்ப்பு மகனையும் பலமாகத்தாக்கிவிட்டு ஆயுதமுனையில் உரிமையாளரை வைத்துக்கொண்டு இக்கொள்ளையை நடத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. உரிமையாளரை கத்தியால் குத்தியும் உடலின் பல பாகங்களில் கீறிக் காயமும் விளைவித்துள்ளனராம்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெரும்பகுதி அங்கு அடைவுக்கு வைக்கப்பட்டவையெனக் கூறப்படுகிறது. இவற்றின் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை.

இக்கொள்ளைக்கோஷ்டியில் ஒரு பிரிவினர் உள்ளே கொள்ளையில் ஈடுபட்டுக்கொண்டிருக்க இன்னொரு பிரிவினர் வெளியில் வயல்வீடுகளின் முன்னால் துப்பாக்கிகள் சகிதம் காவலில் நின்றதாகவும் கூறப்படுகிறது. (ச)

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் காமாட்சிப்பிள்ளை

இணுவில் வல்லிபுரம் காமாட்சிப்பிள்ளை காலமானார். இவர் காலஞ் சென்ற வல்லிபுரத்தின் அருமை மனைவியும், சண்முகராஜா (வட்டாரக்கல்வி அதிகாரி - மினுவாங்கொடை, கம்பஹா)வின் அன்புத்தாயாரும், கமலாதேவி (ஆசிரியை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)யின் அருமை மாமியாரும், கமலராஜா சேம்பிரிஜ் பல்கலைக்கழகம்) யசோதா (யாழ் மருத்துவ பீடம்) ரவிராஜா (U K) மமுனா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அப்பாச்சியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெறும்.

திரு: வ. சண்முகராஜா, 'ராஜபுரம்' இணுவில்.

895

## மரண அறிவித்தல்

### திருமதி சவுந்தரம் கனகசபை

திருமதி சவுந்தரம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கனகசபையின் மனைவியும், யாழ்ப்பாண சுங்க சேகரிப்பாளர் கணேஷ் அவர்களின் சிற்றன்னையும், திருமதி திருமலர் கணேஷ் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி) அவர்களின் மாமியாரும், ரவீந்திரன் (யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம்) சாந்தினி (யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்), சிவாஜினி (கண்டிக்குளி, மகளிர் கல்லூரி), சரவணபவன் (யாழ் பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பேத்தியுமாவார். இவரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (25 9-85) பி. ப. 3 மணிக்கு மண்கும்பானில் இடம்பெறும்.

தகவல்; செ. கணேஷ்,
(சுங்க சேகரிப்பாளர், யாழ். மாவட்டம்)

(908)

## இந்தவீதிகளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தாக்குதல் சம்பவத்தைத்தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, நாவற்குழி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள ஆயுதப்படைகளின் முகாம்களுக்கருகாமையிலுள்ள பிரதான வீதிகளுக்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### வைத்தியநாதர், சபாபதிப்பிள்ளை செல்லப்பா (செட்டியார்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், பூநகரி செட்டிய குறிச்சியைச் சேர்ந்தவரும், காங்கேசன்துறையை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா செட்டியார் 21-9-85ல் சிவபதமடைந்துவிட்டார். இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், சிவகுருநாதன் (மலேசியா), காலஞ்சென்ற மோகராஜா (மலேசியா), கனகசுந்தரம் (மோட்சம் U. K.), பத்மநாதன் (சென்றல் பிஹைஸ், கண்டி), சரோஜினிதேவி, அன்னலட்சுமி, சிறீரங்கநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-9-85 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு காங்கேசன்துறை பொது மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:

திருமதி செல்லப்பாவும் பிள்ளைகளும்
குமார கோவிலடி, காங்கேசன்துறை. (904)

## தமிழ்நாடு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் 153 இடங்களில் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அரச ஊழியர் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் சுமார் 17,500 பேர் உண்ணாவிரதம் இருந்தனர்.

திருச்சி நகரில் கடைகளும் வங்கிகளும், மாநில அரசு அலுவலகங்களும், கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன உணவு அமைச்சர் திரு திருநாவுக்கரசு தலைமையில் அ. இ. அ. தி. முன்னேற்றக் கழகத் தொண்டர்களும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தொண்டர்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

திருச்சி மத்திய சிறையில் ஆயிரம் கைதிகளும் 165 ஊழியர்களும் உண்ணாவிரதம் இருந்தனர்

மதுரையில் விவசாய அமைச்சர் திரு கே காளிமுத்து நூற்றுக்கணக்கான அ இ அ தி மு. கழகத் தொண்டர்களுடன் ஜான்சி பூங்கா அருகிலும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டி காமராஜ் சிலை அருகிலும் உண்ணாவிரதம இருந்தார்கள்.

மண்டபமுகாமில் மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. வீராசாமி தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் 4000க்கு அதிகமான அகதிகள் உட்பட 6,000க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டார்கள்.

இலங்கை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள், தலைமைச்செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் அரச விருந்தினர் இல்லத்தில் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

கூட்டணித் தலைவர் திரு. மு சிவசிதம்பரம் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்

கன்னியாகுமரியில் தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் உண்ணாவிரதம் நடைபெற்றது

நேற்று மாலை ஆறு மணியுடன் உண்ணாவிரதமும், ஹர்த்தாலும் முடிவடைந்ததைத் தொடர்ந்து தமிழகம் மெதுவாக வழக்கமான நிலைக்குத் திரும்பியது. (பி)

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் குலசேகரம்பிள்ளை


ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தில்லையம்பலம் - குலசேகரம்பிள்ளை மலாயன் பென்சனியர் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற தில்லையம்பலம் செல்லமுத்து தம்பதியினரின் தவப்புதல்வனும், ராசமணியின் அன்புக் கணவரும் ஈஸ்வரானந்தன் (தொ. தொடர். திணைக்களம் (D. I T, கொழும்பு), ராஜகுலசிங்கம் (வாணிசட் நட் கொழும்பு), சந்திரவதேவி, மங்கையர்க்கரசி (Australia), ராஜசேகரன் (U K.) மகாராணி, சந்திராதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயதேவி, ராஜராஜேஸ்வரி, சோதிநாதன் (கட்டிடத்திணைக்களம் திருகோணமலை), சித்திரவேலு (Australia), அம்பிகாதேவி (U K), சகாதேவன் (Oman), பகீரதன் (இலங்கை வங்கி திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (23 - 09 - 85) நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெற்றது. அன்னாரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு உதவிசெய்தோர் அனைவருக்கும் எங்கள் நன்றி. தனிப்பட்ட முறையில் உடன் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

திருமதி. குலசேகரம்பிள்ளை
குடும்பத்தினர்

(906)

## மரண அறிவித்தல்

### சங்கீத பூஷணம் திரு. கந்தையா குமாரசாமி



தோற்றம்: 09-05-1930

மறைவு: 23-09-1985

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியர் சங்கீத பூஷணம் திரு கந்தையா குமாரசாமி அவர்கள் 23-9 85ல் காலமானார். அன்னார் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய சங்கீத ஆசிரியை திருமதி ஆச்சிப்பிள்ளை குமாரசாமி அவர்களின் அன்புக்கணவரும், செல்வி கல்யாணி குமாரசாமி Veterinary Surgeon மட்டக்களப்பு), செல்வன் குமரவேள், செல்வன் முருகவேள், செல்வன் கானவேள், செல்வி கண்ணகி ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சேதுநாயகி சுப்பிரமணியம் (நெசவு ஆசிரியை- சாவகச்சேரி), திரு க. சிவசம்பு (அதிபர் யா/போக்கட்டி அ. த. க. பாடசாலை கொடிகாமம்) ஆகியோரின் சகோதரனும், திரு. க. சுப்பிரமணியம் (ஆசிரியர் - யா/மந்துவில் அ. த. க. பாடசாலை, திருமதி G S சிவசம்பு ஆசிரியை - யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவுகூர்ந்து ஏற்றுக்கொள்ளவும்.

905

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under namber B 10036/81. Eelanadu P. O. Box 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24190